# ★ பரணி பாடியவர் முரணி பேசும் விபரீதம்! ★

Phone No. 4502
விலை அணா ஒன்று

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மணி 1 | சென்னை (21—12—49) | வெளியீடு (22—12—49) | இதழ் 122

## பழைமைக்கு 'பராக்' கூறி வைதிகத்துக்கு வளையும் விநோதம்!

### அம்பேத்காரின் அறிவொளி அவர்கள் திருந்த உதவுமா?

—(0)—

### வீணர்கள் விஷக்கொள்கைக்கு விட்டுக் கொடுக்கப் போகிறாராம்!

மிக மிக இன்றியமையாத தெனக் கருதும் விஷய மொன்றை வெளியிட விரும்புகிறேன். இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை எதிர்ப்போர் இந்திய அரசியலில் அடங்கப் பெற்றிருக்கும் ஷரத்து ஒன்றை மறந்து விட்டனரென்றே நினைக்கிறேன். புதிய அரசியலின் 15-வது விதி கூறுவதென்ன? பிறப்பு, ஜாதி, இனம், பால், பிறப்பிடம் இன்ன பிற காரணமாக குடி மக்களிடையே வேற்றுமையை அனுமதிக்காது சர்க்காரென்று அரசியலில் திட்ட வட்டமாக வரையறுக்கப் பட்டிருக்கிறதல்லவா? இந்து சட்டத்தைத் தெரிந்திருப்போர் பிராமணனுக்கும், சூத்திரனுக்குமிடையேயும், ஆணுக்கும், பெண்ணுக்குமிடையேயும் வேறுபாடு கற்பிக்கப்பட்டிருப்பதை யறிவரே! அரசியலோடு முரண்படும் பற்பல அம்சங்கள் இந்துச் சட்டத்தில் (இந்துலா) இருப்பது கண் கூடாகும். இவற்றை யொத்திட்டுப் பார்த்து, லாயர் என்ற முறையில் நான் கூறுகிறேன், இந்தச் சட்டத்தைத் தொகுப்பது மட்டுமல்ல, புதிய அரசியலின் 15-வது விதிக்கேற்ப அதனைத் திருத்தியமைப்பதும் அவசியமாகும். இல்லையெனில், அரசியல் நிறைவேறியதும், இந்துச் சட்டத்தின் பற்பல பகுதிகளையும் கோர்ட்டுகள் செல்லுபடியாகாதனவாய் ஆக்கிவிடும்.

மத்திய சட்ட சபையில் டிச. 19-ந் தேதியன்று இந்த சட்டத் தொகுப்பு மசோதா பற்றி நடந்த விவாதத்துக்கு பதிலளித்த சட்ட மந்திரி டாக்டர் பி. ஆர், அம்பேத்காரின் கருத்துரையை மேலே தந்துள்ளோம்.

இந்து சட்டத்தொகுப்பு மசோதா பற்றிய பொறுக்குக் கமிட்டியின் அறிக்கையை பரிசீலனை செய்யலாமென்பதாக டாக்டர் அம்பேத்கார் கொண்டுவந்த தீர்மானம் பெருவாரி ஆதரவோடு நிறைவேறிற்று. தீர்மானத்தை யெதிர்த்து பதினொரு உறுப்பினர்கள் 'வோட்' செய்தனர்; பலர் நொதுமலாயிருந்தனர். இவ்வாண்டு முடிவுவரை இதை ஒத்தி வைக்கலாமென்றும், மீண்டும் பொறுக்குக் கமிட்டியிடமே மசோதாவை ஒப்படைக்கலாமென்றும் கொண்டுவரப்பட்ட இரு தீர்மானங்கள் தோற்கடிக்கப்பட்டன.

இந்து சட்டத் தொகுப்பு மசோதா பற்றி வைதிகபுரியினரும் ஏகபோக சுயநலக் கும்பலின் பிரதிநிதிகளும் தொண்டை கிழிய ஆட்சேபக் குரல்கள் எழுப்பி யிருப்பதை அனுசரித்து, பிரதம மந்திரி பண்டித நேருவின் போக்கு நிலையுமென்ன வென்பது பற்றி அரசியல் [illegible] ஆவல் கொண்டிருந்தது [illegible] சட்டசபையினரும் எதிர்பார்த்திருந்தனர். நேரு பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

'இம் மசோதாவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக சர்க்கார் கருதுவதாக நானிக் கூட்டம் ஆரம்பத்தில் அன்று குறிப்பிட்டேன். இது விஷயமாய்ப் பல்வேறு கருத்துக்கள் கிளம்பு மென்பதையும் இம் மசோதா ஷரத்துக்களின் அக்கரைகொண்ட பற்பலர் இருக்கவே இருக்கிறார்களென்றும் சர்க்காருக்கு அன்று நன்றாய்த் தெரியும். இப்போது இம் மசோதா பற்றி நிலைமையைத் தெளிவுபடுத்திவிட ஆசைப்படுகிறேன். இந்த சட்ட மசோதா மீது நீண்டதொரு விவாதத்துக்கு அனுமதித்து, நடத்திவந்திருக்கிறோம். மசோதாவின் முக்கியத்தை பொட்டியே இத்தகு விவாதம் அவசியமெனக் கருதப்பட்டது. இது பற்றிய விவகாரத்தை மேலும் நீடிக்கவிடக் கூடாதென்பதல்ல சர்க்கார் நோக்கம். நமக்குள்ள கால வசதி கொஞ்சமே யாகும்.

மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு மட்டுமே இதனை நிறைவேற்றிக் கொண்டு போய்விட வேண்டுமென்பதல்ல சர்க்கார் நோக்கம். மசோதாவின் ஒவ்வொரு ஷரத்தும் வலுக்கட்டாயமாக திணிக்கப் படுமென்று கருதுதல் கூடாது. மசோதாவின் மேலெழுந்த வாரியான நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதே நமது ஆசை எனினும், விட்டுக்கொடுக்கும் மனோபாவத்துடன், மசோதாவின் ஒவ்வொரு ஷரத்தையும் பரிசீலனை செய்ய நாங்கள் ஆயத்தமாகவே இருக்கிறோம்.

இம் மசோதா பற்றி பழைய பொறுக்குக் கமிட்டி உறுப்பினர்களிடமும், ஆர்வமுள்ள இச்சபை உறுப்பினர்களிடமும் சபையைச் சாராதோரிடமும் கலந்து பேச சர்க்கார்

[தொடர்ச்சி 6 பக்கம் பார்க்க]

## நிறத்திமிர் கொள்கையைக் கண்டித்து வேலை நிறுத்தம்

### தென்னாப்பிரிக்க தேசிய காங்கிரஸ் முடிவு

கேப்டவுன், டிச 20—

கருப்பு நிறத்தவர்களை ஒழித்துக் கட்டுவது என்ற மலான் சர்க்காரின் நிறத்திமிர் கொள்கையைக் கண்டிப்பதற்காக சுதேசிகள் ஒருநாள் ஸ்டிரைக் செய்வதென்று, தென் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் பிளோம்போன்டீனில் கூடித் தீர்மானித்திருக்கிறது. ஒத்துழையாமை இயக்கத்தையும் நடத்துவதென யோசிக்கப்பட்டிருக்கிறது.

### வட்டமேஜை மாநாடு நடப்பது சந்தேகம்

லண்டன், டிச 20—

பூர்வாங்க மாநாடு ஒன்றை நடத்த தென்னாப்பிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் இம்மூன்று நாடுகளும் சம்மதித்து முடிவு செய்திருக்கிறது என்ற செய்தி, லண்டன் வட்டாரங்களில் சிரத்தையுடன் வரவேற்கப்பட்ட போதிலும், அதைக் குறித்து எந்தப் பத்திரிகைகளும் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடவில்லை.

ஐ நா.வின் யோசனைப்படி வட்ட மேஜை மாநாடு உருவாகுவது இன்னும் சந்தேகமே என்று, இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது. மலான் சர்க்கார் தன் நிறத்திமிர் கொள்கையைக் கைவிடாத வரையில் தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை தீருவது அசாத்தியமே என்று கருதப்படுகிறது.

சுதேசிகள் பிரதிநிதித்துவம் பார்லிமெண்டில் கூடாது என்பதை மலான் ஒத்திப்போட்டிருப்பதும், பூர்வாங்க மாநாட்டுக்கு ஒப்புக்கொண்டிருப்பதும் ஒரு சிறிது நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

இந்தியா லீகின் தென்னாப்பிரிக்க இந்திய பிரச்னை கமிட்டி அதிகாரி ஒருவர் கூறுகையில், மலான் தன் நிறத் திமிர் கொள்கையை கைவிடுவார் என்று சொல்வது சந்தேகமே என்றும், மலான் தன் கொள்கை தவறு என்பதை அறிந்ததாக அறிகுறி ஓரளவுக்கு காணப்படுவதாகவும் இதை ஒரு நல்ல சூசகம் என்று கொள்ளலாம் என்று தெரிவிக்கிறார்.

### பெவின்-சீன அரசுப்பிரதிநிதி சந்திப்பு

லண்டன், டிச. 20—

லண்டனிலுள்ள சீன அரசுப் பிரதிநிதி நேற்று பெவினை சந்தித்துப் பேசியிருக்கிறார். அவர் எதற்காகச் சென்றார் என்பது பற்றி உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை.

### எட்டாம் எட்வர்ட்-சிம்ப்சன் தம்பதிகள்

பாரிஸ், டிச 20—

ஸ்பெயின் மன்னர் அல்பான்ஸோவின் இரண்டாவது மகன், டான்ஜெய்மி [illegible] செகோவியா, தன் கணவனுக்குத் தன்னை திருமணம் செய்வதால் ஸ்பெயின மன்னர் பதவி கிடைக்கும் என்றால் அதைக் [illegible] தயார் என்று கூறியிருக்கிறார்.

டான் ஜெய்மின் [illegible] இவ்வாண் [illegible] ஜெய்மிக்கு இவர் செய்த முடிவு இன்னும் தெரியாது. தன் முடிவை, தன் கணவர் பத்திரிகையில் பார்த்துத் தெரிந்துகொள்ளும் பொழுது இது அவருக்கு பெரும் அதிர்ச்சியாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

### இந்தியாவில் கம்யூனிஸ்டு முயற்சி பலிக்காது!

#### தென்கிழக்கு காமின்பார்முக்கே அவநம்பிக்கையாம்

லண்டன், டிச. 20—

கம்யூனிஸ்டு முயற்சி இந்தியாவில் பலிக்காது என்று அவநம்பிக்கை தென்கிழக்கு காமின்பார்முக்கே இருப்பதாக செல்லப்படுகிறது. [illegible] இந்தியாவையும் தன் திட்டத்தில் காமின்பார்ம் சேர்த்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தியாவில் தொழிற்சங்க ஸ்தாபனங்களில் கம்யூனிஸ்டு செல்வாக்கு குறைவு என்று தெரிகிறது. —ரூட்டர்.

### மாணவர்களைக் கஞ்சா உபயோகிக்கத் தூண்டினர்!

கெய்ரோ, டிச. 20—

கெய்ரோவில் பள்ளி மாணவர்களிடம் [illegible] கஞ்சா உபயோகிக்க பழக்கி [illegible] பணம் சம்பாதித்து வந்த ஒரு கும்பலை போலீசார் கண்டுபிடித்து அதன் பேர்களுக்குமேல் கைது செய்திருக்கின்றனர். 200 000 ஸ்டர்லிங் மதிப்புள்ள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

## இந்தோசீனா மீது கம்யூனிஸ்டுகள் பாய்வரா?

### அதைத் தாண்டியும் ஆதிக்கப்படுத்துவரென நம்பிக்கை

லண்டன், டிச 20—

இந்தோசீனா மீது கம்யூனிஸ்டுகள் படையெடுப்பதுடன், அதைத்தாண்டியும் தம் கைவரிசைகளைக் காட்டுவர் என்று, வாஷிங்டன் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஆனால் இந்தோசீனா மீது கம்யூனிஸ்டு படையெடுப்பு இராது என்று, பிரிட்டிஷ் பிரெஞ்சு வட்டாரங்கள் கருதுகின்றன. இப்பொழுது கம்யூனிஸ்டுகள் இந்தோசீனாமீது படையெடுத்தால் அது [illegible] [illegible] என்றும் அவர் தேசீய [illegible] என்று ஏற்படும் என்றும் [illegible] எழுதுகிறது. —ரூட்டர்.

### இந்திய அரசியல்

இந்தியாவின் புதிய அரசியலின் 250 பக்கம் கொண்ட கவெர்ன்மெண்ட் இந்திய சர்க்கார் விசேஷ கெஜட்டில் வெளியிடப்பெற்றுள்ளது.

### பிஜியில் இந்தியர் சாதனை

பிஜியிலுள்ள இந்தியர்கள் பாடுபட்டு உழைக்காவிட்டால், ஒரே இராத்திரியில் பிஜி திவாலாகப் போய் விடும் என்று பர்மிங்ஹாம் போஸ்டு பத்திரிகையில் அதன் நிருபர் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் எழுதியிருப்பதாவது:—

75 ஆண்டுகளுக்கு முன்பு பிஜியில் ஒரு இந்தியர்கூட கிடையாது. இன்று அத்தீவிலுள்ள இரண்டரை லட்சம் ஜனத்தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் இந்தியர்கள். பிஜியில் அதன் சுதேசிகள் ஒப்பந்தம் செய்து வந்த கரும்பு சாகுபடித் தொழிலை மேம்படுத்தி அதனால் வரும் வருமானம் கிடைக்கும்படி செய்தவர்கள் இந்தியர்களே. இன்று இக்காலத்தில் தீவு முழுதும் இந்தியர்களே நிறைந்திருந்தாலும் பூசாரிப் பதவிக்கில்லையெனில் பிஜி சுதேசிகள் எண்ணிக்கை [illegible] மிக குறைந்து வருகிறது.

# மாலை மணி

சென்னை 21—12—49 புதன்கிழமை


# அழிவின் ஆரம்பம்!

நாகரிகம் தோய்ந்த மனித வாழ்க்கைக்கு, இன்றியமையாது வேண்டப்படும் கருவிகளில், மொழி முக்கியமான தொன்றாகும்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில, மொழியினலாகும் முக்கியத்துவத்தை நிறைவேற்றித் தரும் அரும் பண்பு பெற்றிருக்கும் மொழி தமிழா கும் தமிழகத்தின் தாய்மொழியாகிய தமிழ். அடிப்படை—சூழ்நிலை—பொதுவியல் அறிவைத் திரும்பட்ட தரத்ததாக அமைத்திருப்பினும், உலக உறவு-உலகியல் ஆழ்வு-விஞ்ஞானம் ஆகியவற்றை, முற்றும் அறிந்து கொள்வதற்கு ஏலாதததான்றாகவே இருந்து வருகிறது. தமிழால் நிறைவேற்றித்தர முடியாத தேவைகளை, நிறைவேற்றித் தரக்கூடிய மொழி ஒன்று உண்டு என்றால்-அப்பொழுது இருக்கும் நடைமுறை உலகல ஆங்கிலமாகத்தான் இருக்கிறது. எனவேதான், தமிழகத்தைப் பொறுத்த வரையில தாய்மொழித் தமிழும், அகில உலக மொழி ஆங்கிலமும் மட்டுமே வாழ்க்கைக்குப் போதுமானவையாகும். வேறு மொழி ஏதும் தேவையில்லை என்று, மொழி நுட்பம் ஆராய்ந்த ஆராய்ச்சி வல்லுனர்கள் பலரும் இந்நாட்டில் கூறி வருகின்றனர்.

தெளிந்த அறிவு காட்டும் வழியைப், பல பொழுதுகளில் வெறியுணர்வு ஏற்றுக்கொள்வதில்லை. அதனை ஒத்து, இந்தி மொழி வெறியர்கள் தமிழ் மொழி அறிஞர்களின் கோட்கையை மறுத்து, ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, அவ்விடத்தில் தம மொழியை ஏற்றுவைக்கப் பாடுபடுகின்றனர். அந்த முயற்சி, நாளுக்குநாள் வெற்றி பெற்றுக் கொண்டும் வருகிறது!

ஆங்கிலம் அளித்துவரும் அத்தனை அளவு பலனையும், இந்தி தருமா என்றால் இல்லை! அந்த அளவுக்கு இந்தியினிடத்தில வக்கு இல்லை-வகையில்லை வழியுமில்லை! ஆங்கிலம் அந்நிய மொழி, அது கூடாது, சொந்த மொழியே இனி ஆட்சிமொழியாக இருக்கவேண்டும், என்று இந்திமொழி ஏகாதிபத்திய வீரர்கள் முழங்குகிறார்கள். இந்தி, அவர்களது தாய்மொழி. எனவே, தாய்மொழியினிடத்து இருக்கும் அன்பை அவர்கள் அப்படி வெறியுணர்வாகக் காட்டுகிறார்கள், என்று அது குறித்து ஓரளவு சமாதானமாவது அடையலாம் நாம்! ஆனால் அவர்களது வெறியுணர்வுக்குத் தாளம்போடும் வகையில, தமிழ்நாட்டவர் சிலர் அதுவும் அதிகார பீடத்தில் வீற்றிருப்போர், ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்திக்கு முடிசூட்ட வேண்டும் என்று கூறுகிறார்கள் என்றால், அதில் அர்த்தம் ஏதும் இருக்கிறதா? அல்லது பலனாவது இருக்க முடியுமா? ஆங்கிலம் அந்நிய மொழி என்றால், அதுபோல தமிழ்நாட்டவனுக்கு இந்தியும் அந்நியமொழி தானே! இந்த இரண்டு அந்நிய மொழிகளில் சிறந்த ஒரு அந்நிய மொழியை ஏற்றுக்கொள்வதென்றால, ஆங்கிலத்தைத் தானே கொள்ள முடியும்! மக்கள் சர்க்காரின் பொதுப் பணம்-பொதுநேரம்-பொது உழைப்பு அனைத்தும் ஆங்கிலத்தற்கு மட்டும் செலவிடப்பட்டாலே, போதுமானதாகுமே! தமிழ்—ஆங்கிலம் இரண்டையும் பட்டும் வைத்துக்கொண்டு இந்த நாடு நலலநிலையில் வாழமுடியுமே! தமிழகத்தின் வளர்ச்சிக்கு இம்மி அளவு கூட இந்தி அவசியமில்லையே! இந்த அடிப்படை உண்மைகளையெல்லாம கருத்திற் கொண்டுதான், நாம் கூறுகிறோம், தமிழ் நாட்டின பொதுவாழ்வில இந்தி எவ்வடிவிலும் இருக்க வேண்டிய அவசியமில்லை என்று! நடுவு நிலை வகிக்கும் நலலறிவு படைத்த பொதுமக்கள் அனைவரும்கூட இந்தக் கருத்தை ஏற்று நிற்கின்றனர்.

தாய்மொழிக் கல்வி பெருமலே இந்நாட்டில் நூற்றுக்கு எண்பத்தேழு பேர்கள் இருக்கிறார்கள் என்றால், அரசாங்கத்தின் கவனம் அதில செலுத்தப்படாமல், வேண்டாத-பயன் தராத இந்திக்கு ஏன் செலவழிக்கப்பட வேண்டும்? இங்குள்ள அமைச்சுக் குழுவினர், வடநாட்டு இந்தி மொழி வெறியர்களின் அடியாக்கடியார்களாக இருக்கின்ற காரணத்தால், இந்தி மொழி படிப்படியாகப் படமெடுத்து ஆடஆரம்பிக்கிறது. இப்பொழுது அகில இந்திய வானொலி நிலையத்திலும், படமெடுத்தாட ஆரம்பித்து விட்டது.

இந்தி மொழிப்படை எடுப்பு தேவையிலலாதது-பயன் தராதது என்றாலும், அதனுடைய கலாசாரம், எந்த வகையிலும் தமிழகக் கலாசாரத்துக்குப் பொருந்தி வராதது-பொருந்தி வராதது மட்டுமலல, முரண்பட்டு நிற்பது-முரண்பட்டு நிற்பது மட்டுமலல, தமிழகக் கலாசாரத்தையே இழிதகைக்குக் கொண்டு போய்விடும் தன்மையது, சமஸ்கிருதப் படையெடுப்பு. தமிழகத்தை எந்தெந்த அளவுக்கு இழிநிலையில் கொண்டுபோய்ச் சேர்க்க உறுதுணை புரிவதாகக் காணப்பட்டதோ, அதைப்போன்றே-அதைத் தொடர்ந்தே—அதே வேலையைச் செய்து வரவே இந்திமொழிப் படையெடுப்பு வடவர்களால் ஏவப்படுகிறது; தென்னாட்டிலுள்ள சொரணையற்ற சோணகிரிகளால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆங்கிலக் கலாசாரம் வேறுபட்டிருந்தாலும், தமிழகக் கலாசாரம் வளம்பெற—வளர்ச்சியுற ஏதுவாக இருந்து வந்தது-இருந்து வருகிறது ஆகவே தான் ஆங்கிலக் கலாசாரத்தோடு, இந்திக் கலாசாரத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்திக் கலாசாரம் கொடிது! கொடிது! என்கிறோம்.

இந்தியையும், இந்திக்கலாசாரத்தையும் தமிழகமக்கள் விரும்பவில்லை-மாறாக எதிர்க்கிறார்கள் என்பதை அறிந்து கொண்ட பிறகு, எப்படியேனும் அவற்றைப் புகுத்திவிடவேண்டும் என்ற வடவரின் தூண்டுதலின் பேரில், வடநாடு நோக்கி வாழும் சென்னை அமைச்சர்குழு, இந்தியை, மறைமுகமாகப், பள்ளிகளிலும், பொதுவிடங்களிலும், புகைவண்டி நிலையப் பெயர்ப்பலகைகளிலும், நாணயங்களிலும், அடையாளங்களிலும், வானொலியிலும் இன்னபிறவற்றிலும் கட்டாயமாகப் புகுத்தும் முயற்சியைக்கைக்கொண்டிருக்கிறது.

சமஸ்கிருதத்தையும், அதன் வழிப்பிறந்த இந்தியையும் தமிழகத்தில பரப்பும் முன்னேடிப் பிள்ளையாக இருந்து வருபவர் மந்திரி மாதவனார்தான். வடவர், இந்தி மூலம் தம் கலாசாரத்தைப் புகுத்தித் தமிழகக் கலாசாரத்தை விழுங்கிவிடப் பார்க்கிறார்கள்! அவர்கள் முயற்சிக்கு "விபீஷணனாக" இருந்து, செயலை வெற்றியுறச் செய்ய முன்னோடி நிற்கிறார் 'இரங்கத்தக்க' மந்திரி மாதவனார்.

வானொலியின் மூலம் இந்தி போதனையை ஆரம்பித்துவைக்கும் முகத்தான மந்திரி மாதவர் பேசும்போது, "காலத்தில கலாசாரத்தைப் பரப்பும் சாதனமாக இந்தி ஆகப் போகிறது" என்று குறிப்பிட்டுள்ளார். இந்திக் கலாசாரம படை எடுக்கிறது-ஆட்சிப் பலத்தைக் கொண்டு-ஆதிக்கப் பலத்தைக் கொண்டு-இந்தி ஏகாதிபத்திய வெறியர்களின தூண்டுதல பலத்தைக் கொண்டு!

வானொலி மூலம் இந்திப் பாட போதனை ஆரம்பம! தமிழகக் கலாசாரம—மொழி—பண்பு ஆகியவற்றின் அழிவின் ஆரம்பமும் அன்றே கல்வி அமைச்சரால் ஆற்றிவைக்கப் பட்டு விட்டது! இன்னும எத்தனை நாட்களுக்குத் தமிழகம்-திராவிடம உறக்கத்திலிருக்கப் போகிறதோ?

---

## இலங்கையில் புது ஸ்டாம்புகள்

கொழும்பு, டிச. 20—

இலங்கை சர்க்கார் புது தபால் தலைகளை வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 4 சத மதிப்புள்ள ஸ்டாம்பில் கண்டி நடனக்காரர் உருவமும், 5 சத ஸ்டாம்பில் போலன்னருவாவிலுள்ள கெஜீவர் குன் அம் 15 சத ஸ்டாம்பில் வீலாக பழத் தோட்டக் காட்சியும், 30 சத ஸ்டாம்பில் ஸிரிய பாறையும இடம் பெறும் என்று தெரிகிறது.

---

## அறிவுக் கதிர்!

காதலுக்கு வழி வைத்துக்
கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்
இதிலென்ன குற்றம்?

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

---

[கற்பனை உரையாடல்:]

# கண்டதும் கேட்டதும்

[துப்பறிவோன]

**உரையாடுவோர்:**—பாஷ்யம் அய்யங்கார், மணி ஐயர்.

**இடம்:**—மாம்பலம் ரயில்வே ஸ்டேஷன்.

**காலம்:**—காலை, சுமார் 10-30 மணி.

பாஷ்: ஹலோ மிஸ்டர் மணி, ஏது உனனைக்கு சீக்கிரமா புறப்பட்டுட்டா போலிருக்கே!

மணி; சீக்கிரமில்ல சார் யூஷ்வலாப் போற நேரம்தான. அந்தாண்டே டி. என். சி. சிக்குப் போயிட்டுப் போகற வேலையிருக்கு. அதனாலேதான், கொஞ்சம ஏர்லியராப் புறப்பட்டுட்டேன.

பாஷ்: டி. என். சி. சிக்கா? அங்கென்ன வேலே?

மணி: நம்ம நாகராஜய்யா இருக்கார் பாருங்கோ.... அவரைப் பார்த்துட்டு வரணும்.

பாஷ்: ஓஹோ என்ன காரியம்?

மணி: அது தான்... அந்த புரோபகண்டிஸ்ட் செலக்ட் பண்றாளோன்னோ...

பாஷ்: எது. புரோகிபிஷன் புரோபகண்டிஸ்ட் பத்தி சொல்றியளா?

மணி: ஆமாம்...

பாஷ்: யாருக்கு ட்ரை பண்றியள்?

மணி: அவன் தான் சார்.. நம்ம நாகராஜன் கையிலே தானே இருக்கு.

பாஷ்: நோ... நோ... அப்படி நினைக்கப்படாதுங்காணும், நாடார் இப்போவெல்லாம பழைய நாடாரயில்லே... ஹி ஈஸ் அட்டாலிச்சுடு வரவர அந்த ஆளண்டேயும் அந்தக் கப்பூனில் ஸ்பிரிட் வந்துடுத்துங்காணும்.

மணி: என்ன இருந்தாலும் நாகராஜனுக்கு அடங்கிண்டுதானே.

பாஷ்: மே பி! பட், அது கூட ஒரு பாட்சுக்காகத் தானே! அந்த யோகம் எத்தனை நாளைக்குச் செல்லுங்காணும்?

மணி: அட, செல்றவரைக்கும் செல்லட்டுமே! அதற்குள்ள நாம அடிச்ச வரைக்கும் லாபம்!

பாஷ்: அது சரி, இந்த ஜாப், பாலுவுக்காகத் தானே ட்ரை பண்றியள.

மணி; ஆமாம்...

பாஷ்: அவனுக்கு புரோகிபிஷனைப்பத்தி என்ன தெரியும்! இல்லாட்டா, புரோபகண்டா பண்ற கெபாஸிட்டி நம்ப பிரதர் இன்லா ஒரு பையன் இருக்கானன்னோ

பாஷ்; ஆமாம்...

மணி: அவன் பி. ஏ. பாஸ் பண்ணிட்டு ஆத்திலே சும்மா உட்காந்திண்டிருக்கான். டி. என். சி. சி. மூலம இப்படி ஏதாச்சு ஒருஜாபிலே இழுத்துவிட்டா.... யூசாலே நல்லது பாருங்கோ!

பாஷ்: எஸ்... எஸ். நன்னு சொன்னியள் ... அதுக்கென்ன ஈசியா கெடச்சுப் போகும். எல்லாம நாடார் மனசுவச்சா பனிஷ்டு உம, அதுசரி, நாடாரைப் பார்த்தியளா?

மணி: பூ! நாடாரைப் பாக்றதாவது... அவரண்டே என்ன இருக்கு? எல்லாம மிஸ்டர் நாகராஜ மனசு வச்சா ஆயிடுறது! டி. என். சி. சி. 'சீ'யாச்சும் இருக்கா? பி. ஏ. படிச்சுட்டா சரியாப் போச்சா?

மணி: நோ...நோ...நோ உமக்கு விஷயமே தெரியலிங்காணும. கவர்மென்ட் இப்போ புரோபகாண்டிஸ்ட் செலக்ட் பண்றது என்னத்துக்கு தெரியுமோன்னோ? புரோகிபிஷனுக்காகவா? அவா என்ன அவ்வளவு பைத்தியக்காராளா? இப்போ பொதுவா காங்கிரஸ் புரோபகாண்டாவுக்கு ஆள தேவைப்படறது. ஜனவரியிலே ஜெனரல் எலெக்ஷன வரப்போறது. அதுக்கு இப்போதிருந்தே வேலை செஞ்சாதானே நல்லது.

பாஷ்: எஸ்...எஸ் யூ ஆர் கரெக்ட்; இப்போ சட்டு

(தொடர்ச்சி 5-ம பக்கம் பார்க்க)

---

# திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம்

தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம், 31—12—49 இரவு 8-மணிக்கு, திருச்சி, கருணாநிதி பார்க் கட்டிடத்தில் நடைபெறும். பொதுக் குழு உறுப்பினர்கள் வரக்கோருகிறேன்.

அண்ணாதுரை,

பொதுச் செயலாளர் தி. மு. கழகம்.

# 'ஐக்கியம்' என்ற பெயரால் அபத்தப் பேச்சு

## ஆரிய ஆட்சியைப் புதுப்பிக்க பார்க்கிறரா கோல்வால்கர்?

"பரத கண்டம் பரத கண்டமாகவே நீடிக்கும். அமெரிக்கா, ரஷியா அல்லது பிரிட்டன் ஆகிய நாடுகளின் கார்பன் காப்பிகளாக, அதாவது அந்நாட்டு நடவடிக்கைகளை அப்படியே காப்பி அடிப்பதாக இருக்காது"

என்று அண்மையில் மதுரையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியபோது, ரா. சு. சே. சங்கத் தலைவர் தோழர் கோல்வால்கர் குறிப்பிட்டிருக்கிறார்.

தோழர் கோல்வால்கரைப் பற்றி நாம் அதிகம் கூறத் தேவையில்லை. இந்துமத வெறி சமதர்மத்துக்குப் புத்துயிரளிக்கப் புறப்பட்டிருக்கும் ஒரு ஸ்தாபனத்தின் தலைவர் அவர். எனவே, அப்படிப்பட்டவர் இன்னமும் இந்தியாவைப் பரத கண்டமாகக் காண்பது பற்றி நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஆனால், இத்தகைய பேச்சை தோழர் கோல்வால்கர் திராவிட நாட்டு மக்களிடையே பேசியிருப்பதனால், அவரது பேச்சு பற்றி ஏதேனும் சொல்ல வேண்டிய நிர்பந்தமான நிலைமையிலிருக்கிறோம்.

இந்தியாவை பரதகண்டம் என்று அழைக்கிறார் கோல்வால்கர். பரத கண்டம் என்ற அளவிலேயே பல சிறு நாடுகளை உள்ளடக்கிய ஒரு கண்டம் இது என்பது தெரியப்படுகிறது. இத்தகைய ஒரு கண்டத்தை ஒரே ஆட்சியின் கீழ் வைத்திருப்பது பொருந்தாது. என்பது நமது வாதம். எனவேதான் நாட்டுப் பிரிவினையை வற்புறுத்தி வருகிறோம்.

நாட்டுப் பிரிவினைக்கு நாம் காட்டும் காரணம் இது மட்டுமல்ல, இந்நாடு ஆரிய கலாசாரத்துக்குட்பட்டு முன்னேற முடியாமல் தவிக்கிறது என்பது, மற்றொரு முக்கியமான காரணமாகும். அந்தக் காரணமும் சரியானதே என்பதை "அமெரிக்காவைப் போலவோ, ரஷியாவைப் போலவோ, பிரிட்டனைப் போலவோ இந்தியா இருக்கக்கூடாது" என்று தோழர் கோல்வால்கர் பேசியிருக்கும் பேச்சே போதிய சான்றாகும்.

ஒரு தலைவர், தற்கால அரசியல் பற்றி பேச புகுந்தால், நடைமுறையிலுள்ள ஏதேனும் ஒரு அரசியல் முறையைத் தான் ஏற்றுக்கொள்வதாகப் பேச வேண்டும், அதுதான் முறை. ஆனால் கோல்வால்கர் செய்தது அதுவன்று: இன்றைய தினம் முன்னேறியுள்ள அரசியல் முறைகளை அத்தனையையும் அலட்சியப்படுத்திப் பேசுகிறார். அமெரிக்க அரசியல் அவருக்குப் பிடிக்கவில்லை. அதாவது, இந்தியா அமெரிக்காவைப் போல் செல்வம் நிறைந்த நாடாக இருப்பதையோ, அல்லது அமெரிக்க ஜனநாயகம் இந்நாட்டில் இடம் பெறுவதையோ அவர் விரும்பவில்லை என்று பொருள்படுகிறது.

சரி, அதுவும் போகட்டும், ரஷிய அரசியலையாவது சரி என்று ஒப்புக்கொள்ளுகிறாரா? அதுவுமில்லை. ஆம்; கோல்வால்கர் ரஷிய சமதர்மத்தை விரும்பமாட்டார் என்பது நாடறிந்த செய்தி. ஆகவே, அதுவும் கிடக்கட்டும். ஜனநாயகத்தின் உறைவிடம் எனக் கருதப்படும் பிரிட்டனின் அரசியல் முறையையாவது ஒப்புக்கொள்ளுகிறாரா என்றால் அதுவுமில்லை.

இந்தியா, அமெரிக்காவைப் போல செல்வச் சிறப்புற்ற நாடாகத் திகழவும் கூடாது. ரஷியாவைப்போல் சீர்திருத்தமும், சமதர்மமும் உடையதாகவும் விளங்கக்கூடாது. பிரிட்டனைப்போல் ஜனநாயக நாடாகவுமிருக்கக்கூடாது. இதுதான் அவரது எண்ணம் போலும்! "மூன்று முழையிலே மூன்று குளம் வெட்டினேன். இரண்டு குளம் பாழ் ஒன்றில் தண்ணீரில்லை" என்பதுபோலல்லவா இருக்கிறது கோல்வால்கரின் வாதம்!

நாகரிக ஆட்சிமுறைகளையும் விரும்பாத கோல்வால்கர், எப்படிப்பட்ட ஆட்சிமுறை தன் தேவை என்பதைத் திட்டமாகத் தெரிவிக்கவில்லை. ஒருவேளை கோல்வால்கர் இந்தியாவைப் பழைய வேதகால இந்தியாவாக ஆக்கிவிடலாமென்று கருதுகிறாரா? முனிவர்களையும், மகரிஷிகளையும் ஆட்சிப்பீடத்தில் அமர்த்தி, மனுவையும் பஞ்சவல்லபரையும் திரும்பி அழைக்கலாமெனக் கருதுகிறாரா? அந்த மனுநீதியையே நிலைநாட்டி சதுர்வருணத்தையே காப்பாற்றிக்கொண்டு நாட்டில் ஆரிய ஆதிக்கத்தை நிலைநாட்டலாமெனக் கருதுகிறாரா? இல்லையெனில், வேறு எக் காரணம் பற்றி இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட பேச்சைப் பேசினார் கோல்வால்கர் என்று கேட்கிறோம்.

ஆகவே, சுருக்கச் சொல்ல வேண்டுமானால், ரா. சு. சே. சங்கத்தின் சார்பிலே கோல்வால்கர் திராவிடத்தில் ஆரிய ஆதிக்கத்துக்கு வழி தேடவந்தவர் என்றே சொல்ல வேண்டும். அதிலும், குறிப்பாக தோழர் கோல்வால்கர் அடுத்தடுத்து தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்வதே இதற்குப் போதிய சான்றாகும். எனவே, திராவிட மக்கள் கோல்வால்கர் போன்றோரின் பிரசாரங்களுக்குச் செவி சாய்த்தல் தீமை பயப்பதாகும்.

மக்களை ஐக்கியப்படுத்துவதாகச் சொல்லிக்கொண்டு, இத்தகைய பிரசாரத்தைச் செய்து வருகிறார் கோல்வால்கர். இது விஷயத்தில் திராவிடர் விழிப்பாயிருப்பார்களாக.

### சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர் 'மாலைமணி'


தூத்துக்குடியில் நாடகங்கள்

24—12—49

தோழியர் மூவாலூர் ராமாமிர்தத் தம்மையார் அவர்கள் தலைமையில்

'சந்திரமோகன்'

25—12—49

தோழர் வி. வி. ராமசாமி அவர்கள் தலைமையில்

"நீதிதேவன் — — மயக்கம்"

ஆகிய இரு நாடகங்கள் நடைபெறும்

நடிப்புப் புலவர் K. R. ராமசாமி அறிஞர் C. N. அண்ணாதுரை மற்றும் பலர் நடிக்கிறார்கள்

விபரங்கட்கு :—

இராமலிங்கம்,
செயலாளர்,
ந. தி. மு. கழகம், தூத்துக்குடி


## மிலான் மேயர் வீட்டு முன்பு நாய்கள் அணிவகுப்பு!

### லைசென்ஸ் கட்டண உயர்வுக்கு பலத்த ஆட்சேபம்!

மிலான், டிச. 20—

மிலான் மேயர் வீட்டு முன், நகரிலுள்ள நாய்கள் எல்லாம் அணிவகுத்து ஊர்வலமாக நடத்திச் செல்லப்பட்டன. நாய் வைத்துக்கொள்வது ஆடம்பரமா என்ற போர்டை, சில நாய்களின் சொந்தக்காரர்கள் தூக்கிச் சென்றனர். இதாலியில் இப்பொழுது நாய்கள் லைசென்ஸ் கட்டணம் அதிகரித்து வருகிறது. அதைக் கண்டிக்கவே, இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்ற ஆண்டுவரை நாய் வைத்துக் கொள்ள லைசென்ஸ் 1000 லியராக இருந்தது. (அதாவது ரூ. 6) இந்த ஆண்டு அது 4500 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதை 7000 லைராக உயர்த்தப்போகிறார்களாம்.

அநேக ஏழைக் குடும்பங்கள் நாய் வளர்ப்பதை அடியோடு கைவிட்டுவிட்டனர். (ருனோ)

## பெவின், நோவல்பேக்கர் அழைக்கப்பட்டுள்ளனர்

கொழும்பு மாநாட்டுக்குச் சென்று திரும்புகையில் இந்தியாவுக்கும் வந்து போகுமாறு பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி தோழர் பெவினுக்கும் காமன்வெல்த் உறவு இலாகா மந்திரி தோழர் நோயல் பேக்கருக்கும் அழைப்புகள் அனுப்பப்பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

இந்திய சர்க்கார் சார்பில் இவ்வழைப்புகளை இந்திய ஹைகமிஷனர் தோழர் வி. கே. கிருஷ்ணமேனன் பிரிட்டிஷ் மந்திரிகளிடம் விடுத்துள்ளார்.

# இது வைதீகர் காலமல்ல வாலிபர் காலம்

## இலங்கையில் பகுத்தறிவுச் சுடர்!

"இது வைதீகரின் காலமல்ல, வாலிபர் காலம். வாலிபர் சாதித்ததை வான் முனிவரும் சாதித்ததில்லை. போராடும் உலகை வேரோடு சாய்த்துப் புதியதோர் உலகைச் சமைக்கப் போகும் புத்துலகச் சிற்பிகள் இன்றைய வாலிபர்கள்தான். இன்று இளைஞர்கள் தங்கள் நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமையை உணர ஆரம்பித்துவிட்டார்கள். நம் தமிழகம் இவ்விதம் தாழ்ந்ததற்குக் காரணம், வாலிபர்கள் பேதைகளாக மாறினதால்தான். ஆனால் இன்று தமிழ் இளைஞர்கள் விழித்துவிட்டார்கள், நம் புலிக்குப் பிறந்தவர்கள் வெறும் பூனைகளல்லர் என்று மார்பு தட்டக் கூற தமிழ் இளைஞர்கள் முன்வந்துள்ளார்கள் அதன் பலனாக அண்ணா மன்றம் இன்று இங்கு கூடியுள்ளது.

நம் நாட்டிற்கு அறிவுப் புரட்சி இன்றியமையாதது. அப்புரட்சியைச் செய்யவே இன்று அண்ணா மன்றம் தோன்றி உள்ளது. அண்ணா மன்றம் பட்டு விரித்த பஞ்சணையல்ல. ஆனால் கல்லும் முள்ளும் நிறைந்த காடு முரடான பாதைதான் நம் இலட்சியப் பாதை. இன்னல்கள் பல தோன்றலாம், ஆனால் எதிர்த்துப் போராடும் மன வலிமை நமக்கு வேண்டும். முட்களுக்கும் பயந்தால் ரோஜாவைப் பறிக்க முடியுமா? சேற்றில் தான் செந்தாமரை பூக்கும். நமது பாதை இன்னல் நிறைந்ததாக இருக்கலாம், ஆனால் அவைகளைக் கடந்து சென்றால் தான் நாம் கனவு காணும் இன்ப உலகைப் பெற முடியும்.

அண்ணா மன்ற இளைஞர்கள் ஸ்தாபனம், அண்ணாவின் லட்சியங்களைப் பின்பற்றி நாம் இம்மன்றத்தை ஆரம்பித்துள்ளோம் எதிர்காலத்தில் இம் மன்றம் சிறந்து விளங்கவேண்டுமானால், இங்கு கூடியிருக்கும் அனைவரும் அவசியம் ஒத்துழைக்க வேண்டும்" என்று கடந்த 11-ந் தேதி திரிகோணமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில், அண்ணா மன்றம் சார்பாக நடந்த பொதுக் கூட்டத்தில் தலைமைதாங்கிய திருவாளர் பா. விஜயநாதன் (4-ம் வட்டார நகரசபை அங்கத்தவர்) தமது தலைமைப் பேருரையில் கூறினார்.

அதன் பின் தேசிய பண்டிதர் ஐ. சரவணமுத்து அவர்கள், ஏகாதிபத்தியவாதிகளின் அடக்குமுறை ஆட்சியால் எங்குமே அமைதி நிலவுவது இல்லை. அவைகளை எதிர்த்துப் பல புரட்சிப் பூகம்பங்களும், உரிமைப் போர்களும் நடைபெற்றிருக்கின்றன என்பதைச் சரித்திரம்படித்த ஒவ்வொருவரும் நன்கு அறிவர். அண்ணா மன்றம் இளைஞர் ஸ்தாபிதம் என்பதை அறிந்ததும், வைதீகர் பலர் சீறுவார்கள். நாட்டு வேதாந்திகள் அதற்குத் தாளம் போடுவார்கள். எதிர்காலத்தில் எத்தர்கள் பலர் தோன்றுவார்கள் இம்மன்றத்தை அழிப்பதற்கு. இளைஞர் கண்டு நாம ஏமாளிகளாக இருந்திடக்கூடாது. எதிர்த்துப் போராட வேண்டும். அதனால் இக்கோமாளிகள் கொட்டமடக்கவேண்டும். திரிகோணமலையில் இளைஞர் ஸ்தாபனம் ஒன்று தோன்றியதைக் கண்டு யான் பெரிதும் மகிழ்கிறேன். அதிலும் அண்ணாவின் லட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு ஸ்தாபிப்பதை நினைத்ததும், எனது மகிழ்ச்சி எல்லையை மீறுகின்றது. அண்ணா மன்றம் வாழ்க! அது எதிர்காலத்தில் நல்ல தீர்ப்புக் கூறும் மன்றமாக மாறட்டும் என்று தன் பேச்சில் குறிப்பிட்டார். அதன்பின் மன்ற வளர்ச்சியைப்பற்றி எஸ். கே. தம்பி, எஸ் சாமப்பா, டி. கணேசபிள்ளை, ஜே. எலியாஸ், சி. முத்துசாமி, ஈ. சுவாமிநாதம் முதலியோர் பேசினர் அதன்பின்னர் கே. தம்பி அவர்களால் அண்ணா மன்றத் திட்டங்கள் வாசிக்கப்பட்டது. பின் உறுப்பினர் தேர்தல் நடைபெற்றது.

## சோதிடப் புரட்டு!

லண்டன், டிச. 20—

ஓர் நியூஜிலாந்து வாசியான அலெக்ஸ் பளாண்ட் என்பவரிடம், ஒரு ஜோசியன் அவர் 6 மாதகாலம் தான் இன்னும் வாழ்ந்திருப்பார் என்று சொல்லிவிட்டான். இதை நம்பிய அலெக்ஸ் தன்வீடு வாசல்களை எல்லாம் விற்று விட்டு, குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டினார். ஒவ்வொரு ரேஸிலும் ஏராளமான பணம் கிடைத்தது மறுபடியும் அவருக்கு ஜோசியர் அதிக காலம் அவர் வாழ்வார் என்று ஜோசியம் கூறியிருக்கிறாராம். (ஏனோப்)

## காமன்வெல்த் மாநாடு

### இலங்கைக் குழு விவரம்

கொழும்பு, டிச. 20—

காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொள்ளும் இலங்கைக் குழுவினரின் பின் கண்டவர்கள் இருப்பர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது:

இலங்கைப் பிரதம மந்திரி சேனநாயகா, நிதி மந்திரி ஜயவர்த்தனா, சட்ட மந்திரி ராஜபக்ஷி.

இலங்கைப்பிரதமர் தோழர் சேனநாயகாவே மாநாட்டிற்குத் தலைமை வகிப்பார். மாநாட்டின் காரியதரிசிகளாக பிரிட்டனைச் சேர்ந்த நோர்மன் ப்ருக்ஸும் தோழர் கே. வைத்தியநாதனும் தொண்டு செய்வர்.

இம்மாநாட்டு நடவடிக்கைகளைக் காண பொதுமக்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## காந்தி நினைவு நிதி

காந்தி தேசிய நினைவு நிதிக்கு நவம்பர் 30-ந் தேதி வரை ரூ 10,60,58,539 சேர்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த நவம்பரில் மட்டும் ரூ. 2,37,321 திரட்டப்பட்டதாம்.

# கழக நடவடிக்கைகள்

தனுஷ்கோடி:- இவ்வூர் தி. மு. க. செயற்குழுக்கூட்டம் 9-12-49ல் தோழர் இ. மாசிலாமணி அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது வருகிற 15-1-50-ல் துவக்க விழா நடத்துவதென்று முடிவுசெய்யப்பட்டது. பின் தோழர் எஸ். ரெங்கநாதன் நன்றிகூற, கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

தளவாய்புரம்:- இவ்வூர் தி. மு. க. செயற்குழுக்கூட்டம், 11-12-49-ல் தோழர் க. சங்கரநாராயணன் தலைமையில் நடைபெற்றது. வரவு செலவுக் கணக்கு சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது. பின் விருதைப் பெரியார் பெ. வி. சிதம்பரனார் மறைவுக்கு வருந்தியும், சமதிலக்க நாடகங்கள், நூல்கள் ஆகியவற்றிற்கு தடைபோட்டிருப்பதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கும்படி தலைமைக் கழகத்தைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (செ-ர்)

• • •

சேலம் அம்மாபேட்டை:- மெயின்ரோடு கிளையின் செயற்குழுக் கூட்டம், 4-12-49-ல் கூடியது. அதுபோது, "தி. மு. கழக நூல் நிலையம்" ஒன்றினை உடனடியாக ஏற்படுத்துவதென்றும், ஞாயிறுதோறும் சொற்பயிற்சிக் கூட்டம் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

* * *

சேலம் அம்மாபேட்டை :— மெயின் ரோடு கிளையின் சார்பில் 11—12—49 ல் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. "முன்னேற்றம்" என்ற பொருள் பற்றி தோழர்கள் நம்மாழ்வார், வள்ளியப்பன், ராதாகிருஷ்ணன், ராமலிங்கம், திருவேங்கடம், அப்துல் ரஹீம், மாணிக்கப்பன், சுப்பையன், சுந்தரமூர்த்தி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

• • •

திருத்தங்கல்:— இவ்வூர் தி. மு. க. செயற்குழுக் கூட்டம், 11—12—49 அன்று "கஸ்தூரி ஜெயகாய்" கம்பெனியில் தோழர் எஸ். வி. செண்பகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர் பொன்னுப் பாண்டியன் நாட்டுப் பண் பாடினார். பின்னர் 13—11—49ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் வரவு செலவுக் கணக்கு சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும், 26-12-49 ல் விருதுநகரில் நடக்க இருக்கும் "சந்திரமோகன்" நாடகத்திற்கு டிக்கட் விற்பனை செய்வதென்றும் பொதுச் செயலாளரின் இராமநாதபுரம் மாவட்டச் சுற்றுப்பயணத்தின்போது திருத்தங்கலுக்கும் அழைத்து கூட்டம் நடத்துவதென்றும், இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (வி. உ.)

* * *

சோமரசம்பேட்டை :— இவ்வூர் கிளையின் உறுப்பினர்கள் கூட்டம் 11—12—49 ல் டாக்டர் எ. ஜான் மருத்துவ விடுதியில் நடைபெற்றது. அதுபோது, தற்காலிகமாக இதுவரை, பணியாற்றி வந்த செயற்குழு கலைக்கப்பட்டு புதிய நிரந்தரமான செயற்குழு வொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- டாக்டர் எ. ஜான்; துணைசெயலாளர்:- வி. எம். கணேசன்; பொருள்உறுப்பினர்:- கே. எம். முத்துசாமி; விளம்பர உறுப்பினர்:- கே. கோவிந்தராசன், ஏனைய செயலுறுப்பினர்:- எஸ். எஸ். இரத்தினம், கே. பி. அரங்கராசன், கே. எஸ். வெங்கடாசலம், வி. ஜி. தங்கவேலர், டி. சாமிநாதன். தோழர் பி. வெங்கடாசலம், கழக விதிகளையும், கொள்கைகளையும், மீறி நடந்ததால், அன்னாரின் உறுப்பினர் உரிமை பறிக்கப்பட்டது. பின்னர் இவ்வாண்டு பொங்கல் விழாவை தோழர் கே. ஏ. பி. விசுவநாதம் அவர்களை அழைத்து சிறப்பாகக் கொண்டாடுவதென்றும், பொதுச் செயலாளரின் திருச்சி மாவட்டச் சுற்றுப்பிரயாணத்தின்போது சோமரசம்பேட்டைக்கும் அழைப்பதென்றும், தீர்மானிக்கப்பட்டது. திருச்சி மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாக தோழர்கள் டாக்டர் எ. ஜான், வி. எம். கணேசன் இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். து-செ

* * *

பேளூர்:— இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம், 11-12-49-ல் தோழர் வெ. தோப்புசுசர் தலைமையில் நடைபெற்றது, அதுபோது தோழர்கள் ராஜமையா, இல்லசிதம்பரம், ஆகியோர் தி. மு. கழகத்தின் நோக்கம் பற்றி பேசினர் பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, தோழர் தி. சு. தில்லைநாதனின் திராவிட நாட்டுப் பண்ணுடன் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

தனுஷ்கோடி:— இவ்வூர் தி. மு. கழக செயற்குழு உறுப்பினர் தோழர் டி. இராமநாதன் அவர்களின் புதல்வன் 8—12—49 ல் இயற்கையெய்தியமை குறித்து இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் அன்னார் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபமும், ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆசிரியருக்கு முடங்கல்

### பல்கலைக் கழகத்தார் பார்வைக்கு

ஐயா,

வித்வான் தேர்விற்குரிய புத்தகங்களில் மதங்க சூளாமணியும் ஒன்று. இப்புத்தகம் அச்சிலும் இல்லை கையிலும் இல்லை, பின் கற்பது, எவ்வாறு?

2. வித்வான் பட்டம் பெற்ற ஒருவர் பி. ஓ. எல். பட்டம் பெறுவதற்கு ஆங்கிலம்மட்டும் படித்தால் போதாதா? மறுபடியும் வித்வான் தேர்வு எழுதுதல்எதற்கு? (குறிப்பு: பிரைவேட்டாக எழுதுபவர்கள் எஸ். எஸ். எல். சி. ஆங்கிலம் புலவர் புகுமுகம் தமிழ்; இன்டர் ஆங்கிலம் பிரிலிமினரி தமிழ்; பி. ஏ. ஆங்கிலம் வித்வான் தமிழ் எழுத வேண்டும்)

3. வித்வான் பட்டம் பெற்றவர் பி. ஓ. எல் தேர்வில் ஆங்கிலத்தில் வெற்றியும் தமிழில் தோல்வியும் பெறின் பட்டம் பெறமுடியாதே. முன்னதாக வித்வான் தேர்வில் வெற்றியுற்றுப் பின்னர் தோல்வியுற்றமைக்குத் தகுதியில்லையென்று கூறமுடியுமா? இதுபற்றி பல்கலைக் கழகத்தார் கண்பார்த்தருள வேண்டுகின்றேன். இன்னும் எத்தனையோ குறைபாடுகள் அதைத்தான் எழுதுகிறேன்.

காரைக்குடி 4-12-49 } அன்பன் புலவர்

## பிறப்பு

மம்சாபுரம், டிச. 10—

இவ்வூர் தோழர் பா. பழனிசாமி அவர்களின் துணைவியாருக்கு 4—12—49 ல் ஓர் ஆண் மகவு பிறந்தது. அம் மகவுக்கு "கலைமணி" எனப் பெயர் சூட்டப்பட்டது.

[இதன் நினைவாக ரூபாய் ஒன்று அனுப்பப்பெற்றோம். நன்றி! ஆ-ர்]

# மனித ஆராய்ச்சிக்கு இந்தியாவில் ஏராள வசதிகள்

## கிரீஸ் இளவரசர் தரும் தகவல்கள்

சென்னை, டிச. 19—

இந்தியாவிலே மனித சாஸ்திர ஆராய்ச்சி செய்வதற்கும் பொருள்கள் மிகமிக அபரிமிதமாக இருக்கின்றன. இப்பொருளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு சர்க்கார் உதவி அளித்தால் புராதன இந்திய நாகரீகம், கலை, பழக்கவழக்கங்கள் முதலியவை வெளிவரும் என்பதற்கு ஐயமில்லை. ஆனால் அன்னிய ஆட்சியிலும் இதைப்பற்றி ஆராய்வதற்கும், படிப்பதற்கும் ஒருவிதமான ஏற்பாடும் செய்யாதிருந்தது மிகவும் வருந்தத்தக்கதே என்று கிரீஸ் இளவரசர் பீட்டர் இன்று 'குளோப்' நிருபரிடம் கூறினார்.

கிரீஸ் இளவரசர் பீட்டர் இப்பொழுது ஐந்து மாதகாலமாக நீலகிரியிலிருக்கும் "தோடர்" ஜாதிகளிடம் இருந்து அவர்களுடைய பழக்கவழக்கங்களை ஆராய்ந்து வருகிறார். மலையாளப் பிரதேசங்களையும், இலங்கை முதலிய இடங்களுக்கும் சென்று அங்கிருக்கும் ஜாதியர்களைப் பற்றியும் ஆராய்ந்திருக்கிறார்.

ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் தென் ஆப்பிரிக்கா முதலிய இடங்களுக்குச் சென்று ஆராய்ச்சி செய்வதைவிட இந்தியாவிற்குச் சென்று அனேக ஆண்டுகள் ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய பொருள்கள் இருக்கின்றன என்று அவர் கூறுகிறார்.

நீலகிரியிலிருக்கும், தோடர்கள் சுமேரியா நாகரீகத்தைச் சேர்ந்தவர்கள் என்று இளவரசர் அபிப்பிராயப்படுகின்றார்.

சர்க்கார் இந்த ஜாதியர்களுக்கு இனம் உதவி செய்யாவிடில், வெகு சீக்கிரத்தில் இவர்கள் அழிந்துப் போவார்களென்பதில் ஐயமில்லை, என்று கூறினார். அவர் மேலும் கூறியதாவது:—

இவர்களிடையே கோத்திரம் தகப்பன் முறையில் வருகின்றது. ஆனால் "லபி", (தோடர்களின் கோத்திரப்பெயர்) தகப்பன் முறையிலும், தாயின் முறையிலும் வருகின்றது என்பது கவனிக்கத்தக்கது.

தமிழ்நாட்டு மணமுறைகள் மிகவும் நேர்முகமாக இருப்பதால், இதைப்பற்றி ஆராய்வதில் அவ்வளவு ஊக்கம் அளிக்கவில்லை.

வட திருவிதாங்கூர், வடமலையாளப் பிரதேசங்கள், வடக்குக் கொச்சி முதலிய இடங்களைச் சுற்றிப் பார்த்தேன், இங்குஇருக்கும் கைத்தொழிலாளர்கள், கம்மாளர்கள் இவர்களுடைய திருமண முறைகளைப் பற்றி ஆராய்வது கருத்தை கவரக்கூடியதாயிருக்கிறது.

## ஆப்கன் மன்னர் மெக்காவுக்குச் செல்வார்

கெய்ரோ, டிச. 20—

ஆப்கானிஸ்தான மன்னர் சீக்கிரமே கெய்ரோவுக்குச் செல்வார் என்றும், அங்கிருந்து அவர் மெக்காவுக்கும் மெதினாவுக்கும் செல்வார் என்றும், இங்கு அரசர் மன்னரை அவர் சந்தித்தும் பேசுவார் என்றும் இங்குள்ள ஆப்கன் அரசப்பிரதிநிதி அறிவித்திருக்கிறார்.

பாரிஸில் ஆப்கன் மன்னருக்குக் கண் ஆபரேஷன் செய்யப்பட்டு, இப்பொழுது அவர் குணமடைந்து வருகிறார்.

# தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

—————;0:—————

## மணப்பாறை

மணப்பாறை, டிச. 18—

17-12-49 சனி மாலை மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தத்தம்மையார் அவர்கள் தலைமையில், திருச்சி மாவட்ட கிளை மணப்பாறை தி. மு. கழகத்தின் துவக்க விழா சிறப்பாக நடந்தேறியது. விழாவிற்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட தோழர்கள் உள்ளூரிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் வந்திருந்தார்கள். தலைவர் பிரேரணையை கழகச் செயலாளர் ச. சமுத்திரபாண்டியன் கூறியதும், கூட்டத் தலைவர் அம்மையார் அவர்கள், சுமார் மணி நேரம் வடமொழியால் நம் மக்களுக்குநேர்ந்துள்ள இழிதன்மையை, எடுத்துரைத்தும், ஆரியம் நமக்குச் செய்த சதியைப்பற்றியும் பெண்குல முன்னேற்றத்துக்கான அறிவுரையையும் விளக்கமாக கூறியபின் திருச்சி தோழர் என். நெடுமாறன் தற்கால ஆட்சியாளர்கள் போக்கு முறைப்பற்றியும், மக்கள் வாழும் பிற்போக்கு நிலையையும், கோவில்களில் தேங்கிக் கிடக்கும் செல்வங்களைப்பற்றியும், திராவிடர் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள தொடர்பு பற்றியும், திராவிடர் கழகமும் தி. மு. கழகமும் மோதுதல் இந்நாட்டுக்குநன்மைசெய்து இன்ப திராவிடத்தைப் பெறவேண்டுமென்பது, மற்றியும் சுமார் 2 மணி நேரம் விளக்கமாக பேசிய பின் தோழர் டி. கே. சீனிவாசன் திராவிடத்தில் ஆரியத்தால் ஆக்கப்பட்ட ஆலயங்களின் ஊழல்கள் பற்றியும், ஆரிய கடவுள்களின் இழி தன்மைகள் பற்றியும், சர்க்கார் செய்யும் தவறுதல்கள் பற்றியும், பக்தியின் பேரால் மக்கள் வாழ்க்கையிலே புகுந்துள்ள மடமைகள் பற்றியும், மதி பெற்று மக்கள் வாழ வழி வகுத்துத் தருவதுதான் திராவிட முன்னேற்ற கழகம் என்றும் விளக்கமாகவும், விரிவாகவும் சுமார் 1-15 மணி நேரம் பேசிய பின், தலைவர் மூதாட்டியார் அவர்கள் முடிவுரையாக, மாரியம்மன், பார்வதி, சரஸ்வதி, லட்சுமி, துரோபதை முதலிய பெண் தெய்வங்களின் கதைகளில் நிறைந்துள்ள கற்பு கெட்ட தன்மைகளையும், அத்தகைய கடவுள்கள் தேவையா அப்படிப்பட்ட கடவுள்களை நம் நாட்டு பெண்கள் வணங்கி வருகின்ற கேட்டினைப்பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகம் பெண்களுக்கு பல முன்னேற்றப்பாதைகளை அமைத்துத் தர என்னுளான முழு உதவிகளை அளிப்பதெனவும் உறுதி கூறினார்கள். கடைசியாக திராவிட முன்னேற்றக் கழகத்தை இந்நகர மக்களும் இந்தப் பகுதி மக்களும் ஆதரித்து வருமாறு கேட்டுக்கொள்வதுடன் திராவிட மக்களாகிய நீங்கள் அனைவரும் நல்வாழ்வு வாழ்ந்து நாட்டுக்கு நல்ல தொண்டு செய்யுமாறு கேட்டுக்கொண்டு, உரையை முடித்தார்கள். கழகச் செயலாளர் சமுத்திரபாண்டியன் வணக்கம் கூறுதலுடன் கூட்டம் 9-30 மணிக்கு முடிந்தது.

கூட்டத் துவக்கத்தில் நடிகர் தோழர் எம். கே. மருதை அவர்களால், இயக்கப் பண் பாடப்பட்டது. (வி-உ)

## செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும் இந்தியா

### பிரிட்டிஷ் பத்திரிகையின் ஆய்வுரை

லண்டன், டிச. 20—

ஸ்டர்லிங் கடன் அளவைக் குறைப்பது என்பது இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் வரவேற்கப்படாது என்பது இயற்கைதான் என்றும், நாணய மதிப்புக் குறைவால் ஸ்டர்லிங் இருப்பைத் தாராளமாக அள்ளி விடுவதற்கில்லை என்றும், ஆகவே இந்தியாவும் பாகிஸ்தானும், தங்கள் உள்நாட்டுச் செலவைக் குறைத்துக்கொள்ள முன்வந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும் பிரிட்டிஷ் பத்திரிகையான ஸ்டேட்ஸ்டிக் கூறுகிறது.

## வேலை செய்ய நிர்ப்பந்திப்பதை ரொடீஷியா கைவிடும்!

லண்டன், டிச. 20—

சுதேசிகளை வேலை செய்ய நிர்ப்பந்தித்து ஆள் சேர்க்கும் வழக்கத்தைத் தென் ரொடீஷியா இனி கடைபிடிக்காது என்று தெரிகிறது. இரண்டு ஆண்டு கட்டாயப் பயிற்சி யோசனையையும் ரொடீஷிய சர்க்கார் ஏற்கவில்லை.

விவசாய ஜில்லாக்களில் மட்டும் தொழில் செய்ய முன்வரும் தொண்டர்ப்படையைத் திரட்டும் யோசனை மட்டும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

## கக்குவான் நோயும் இளங் குழந்தைகள் சாக்காடும்

ஜினிவா, டிச. 20—

பிரிட்டனில் கக்குவான் வியாதியில் இளங்குழந்தைகள் சாக்காடு அதிகரித்து வருவதைத் தடுக்க, அமெரிக்க விசேஷ நிபுணர் டாக்டர் பால்கெண்டிரிக்கை, பிரிட்டிஷ் சர்க்கார் உதவி செய்ய அழைத்திருக்கின்றனர். இந்த வியாதியை புதுவித ஜெக்ஷன் மருந்துமூலம் குணப்படுத்தலாம் என்பதை, இவர் கண்டுபிடித்திருக்கிறார். — குளோப்

## அகரம் சேரி

அகரம்சேரி, (வ-ஆ) டிச. 13—

11-12-49 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு, வேலூர் தாலுகா அகரம் சேரி கிராமத்தில், திராவிட முன்னேற்றக்கழகத் துவக்க விழா, தோழர் எம். குப்புசாமி அவர்களின் தலைமையில் கூடியது. தோழர் வி. எம். இராமசாமி அவர்கள் கொடியேற்றிய பின்னர் தோழர்கள் சே. வ. வெங்கடேசன், பா. துரையரசு, வ. ஜெகதீசன் ஆகியோர் கழகத்தின் அவசியத்தைப்பற்றியும், அதற்கான திட்டங்களைப்பற்றியும் விரிவாகப் பேசினர். பின்பு கூட்டம் இனிது முடிவுற்றது.

# திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

23-12-49

நாகர்கோவில் :— டி. சே சீனிவாசன்.

24—12—49

பெரம்பூர் :— இரா. நெடுஞ்செழியன், இரா. இளம்வழுதி, காஞ்சி மணிமொழியார்

கொமரலிங்கம் :— சி. பி. சிற்றரசு.

அழகனுபுரம் (நாஞ்சில்) :— டி. கே. சீனிவாசன்.

# விவசாயிகளுக்கு நல்வாழ்வு அளியுங்கள்

—:(0):—

## நியாயமான விலை உயர்வுக்கு வழி கோலுக!

—(0)—

### சுயதேவையைப் பூர்த்தி செய்ய அ. இ. கிசான் காங்கிரஸ் காட்டும் வழி

குடியானவர்கள் உற்பத்திச் செய்யும் விளை பொருள்களுக்கு, நியாயமான விலைகள் கிடைக்குமாறு சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு பயிர் தொழி செலவு, சம்பளவிகிதங்கள் குடியானவர்களுடையவும் விவசாய தொழிலாளர்களுடையவும் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றைப் பற்றி நாடெங்கும் பூர்வாங்க விசாரணைகள் நடத்தவேண்டும்.

உணவுதான்ய உற்பத்தி பெருகி 1951-ல் இந்தியா சுய தேவை பூர்த்தி நிலையை அடையக்கூடியவாறு, கிசான்கள் அனைவரும் தங்கள் பயிர்த் தொழில் முறையைத் தங்களது சக்திக்கேற்றவாறு சீர் பெற மாற்றியமைக்கப்பாடு படவேண்டும்.

இவை, அண்மையில் புதடில்லியில் தோழர் என். ஜி. ரங்கா அவர்கள் தலைமையில் நடைபெற்ற கிஸான் மாநாட்டுத் தீர்மானங்களாகும்.

நாட்டில் உணவுப் பஞ்சம் குடி கொண்டிருக்கும் இந்நாளில், கிஸான்களின் இத்தகைய கோரிக்கைகள் கவனிக்கப்படவேண்டியது மிக மிக இன்றியமையாததாகும். உழவர்களின் உள்ளத்தில் ஊக்கம் பெருகாத வரை உற்பத்திப் பெருகுவது கடினம்.

உழவர்களுக்கு ஊக்கம் உண்டாகுமாறு செய்வது எங்ஙனம்? இதுதான் கவனிக்க வேண்டிய விஷயம். குடியானவர்கள் தாம் உற்பத்திச் செய்யும் உணவு பொருள்களை விற்று அதை செய்து வாழ்வதே தொழிலாகக் கொண்டவர்கள். எனவே, அவர்கள் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்யும் விளை பொருள்களுக்கு நியாயமான விலை கொடுக்க வேண்டுவது அரசியலார் கடன். இப்படிச் சொல்வதால் குடியானவர் கேட்கும் விலையைக் கொடுத்துவிட வேண்டும் என்பதல்ல பொருள். குடியானவர்களுடையவும், விவசாயிகளுடையவும் வாழ்க்கைத்தரம், பயிர்த் தொழிலுக்கு அவர்கள் செலவிடும் தொகை இன்ன பிறவற்றை நன்கு விசாரித்து அறிந்து, அவ்வாறு செய்ய வேண்டும். இதையே கிஷி மாநாடு வற்புறுத்தியுள்ளது.

விவசாய தொழிலாளர் நல்வாழ்வு நடத்த இயலுமாறு விளை பொருள்களின் விலைகள் லாபகரமானதாக நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் கிஷி மாநாடு இந்திய பிரதமரைக் கேட்டுக் கொண்டுள்ளது. எனவே, விவசாயிகள் விலை உயர வழிவகை செய்ய வேண்டியது அரசியலாரின் அவசரமும் அவசியமுமான கடமையாகும்.

விளை பொருள்களைச் சற்று அதிகமான விலைகொடுத்து வாங்குவது அரசியலாரால் ஆகாத காரியமன்று. அடுத்த 1951-ம் ஆண்டிற்குப் பிறகு வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள் இறக்குமதிசெய்யப்படமாட்டாதென்று இந்திய சர்க்கார் தெரிவித்துவிட்டது. அதன் இறக்குமதி நிறுத்தப்படுமேயானால், இந்திய சர்க்கார் உணவுப்பொருள்களுக்காகச் செலவிடப்படும் தொகையான சுமார் 130-கோடி ரூபாய் அரசியலாருக்கு மிச்சமாகும். ஆனால் அரசாங்கம் அந்தத் தொகையை மிச்சமென்றோ லாபமென்றோ கருதாமல், முடிந்தால் அவ்வளவு தொகையையோ, அல்லது அதில் ஒரு பெரும் பகுதியையோ விவசாயிகள் நலன்கருதிச் செலவிடமுன்வர வேண்டும். அதாவது, கிசான்கள் மாநாட்டுத் தீர்மானத்தின்படி விளைபொருள்களுக்கு லாபகரமான விலை நிர்ணயிக்க வேண்டும்.

இங்ஙனம் செய்தால் உழவர்களின் உள்ளத்தில் ஊக்கம் பெருகும். ஊக்கம் பெருகினால், உற்பத்திப் பெருகும். உற்பத்தி பெருகினால், நாடு நலம் பெறும். எனவே, இந்திய அரசியலார் கிஸான் மாநாட்டுத் தீர்மானங்களுக்குச் செவிசாய்த்து ஆவன செய்ய முன் வருவார்களாக.

## கண்டதும்...

[2-ம் பக்கத்தொடர்ச்சி]

வேஷமே அடியோடே மாறிப்போயின்னு இருக்கு! எங்க பார்த்தாலும் திராவிட கழக பிரச்சாரமயமே பல ஊர்லேருக்கு! வர்ற எலெக்ஷனுக்குள்ளே இந்த சிட்சுவேஷனை டேக்கில் பண்ணவேண்டாமோ!

மணி: ஆம்... அப்படிச் சொல்லுங்கோ, அதுக்காகத்தான் இந்த புரோபகாண்டா பிசினசிலே நம்மவா பார்ட்டி எடுத்துக்கணும் என்கிறேன். அந்த ஆபரேஷன் ஐக்கட்டாட்டே தான் அந்த பாலுடைய லுக்குவேலக்கு ட்ரைப் பண்றேன். பயகொஞ்சம் டாவிட்டிக்ஸ் தெரிஞ்சவன். இப்படி நாலு கூட்டங்களிலே பேசினா பின்னாலே ஒரு லீடரா கூட வந்துடலாம்.

பாஷ்: அட, லீடராவது இருக்கட்டுங்காணும், நம்ம கம்யூனிட்டிக்கு சர்வீஸ் பண்ற சான்ஸ் கிடைக்கிறதே, அது போதாதா?

காங்கிரஸ் புரபகாண்டன்னு சொன்னா நினைச்சேள், நம்ம வர்ணாசிரம தர்மத்தைக் காப்பாத்றதுக்கு இதுவொரு மார்டன் மெதடு

மணி: எஸ்! எஸ்! எக்சாக்ட்லி கரெக்ட்டானும் அந்த ஐடியாவோடேதான நம்ம பாலு பயலுக்கு இந்த ஜாபை ட்ரை பண்றேன். கிடைக்குமின்னு ஹோப் இருக்கு.

பாஷ்: பாருங்கோ..... பாருங்கோ; கிடைச்சா நல்லது தான. நெக்ஸ்ட் எலெக்ஷன்லெ காங்கிரஸ் வின் பண்றதும் பண்ணாததும் கவர்மென்ட் கையிலேதானிருக்கு.

மணி. அதுக்குதான் இந்த அரேஞ்மென்ட் எல்லாம்; இல்லாவிட்டா நிஜமா புரோபகேஷனுக்காகவா இந்த புரபகாண்டா? ஏன், அவ்வளவு தூரம் போவானேன் அசெம்பிளி புரோசீடிங்ஸை கவனித்தியளோன்னு?

பாஷ்: எது. பிரோகிபிஷனைப் பத்திய புரோசீடிங்ஸையா தானே சொல்றியள.

மணி: ஆமாம், அதிலே யிருந்தே தெரிஞ்சுண்டிருக்கலாமே! ஒரு கேள்விக்குபதில் சொல்லச்சே புரோகபிஷன் மினிஸ்டர் பார்ட்டி புரோபகாண்டாவுக்காக புரோபகாண்டிஸ்டை அப்பாயிண்ட் பண்ணல்லே, பட், பீயிங் தி கவர்மென் சர்வண்ட்ஸ் நேச்சுரல்லி தேவில சப்போர்ட் தி கவர்மென்ட்" என்று சொல்லியிருக்கேர். இதுக்கு மீனிங் என்ன? அதைக்கொண்டுதான் நான் சொல்றேன் திஸ் இஸ் நத்திங் பட் பார்ட்டி புரோபகண்டா"

பாஷ்: சபாஷ்! நீர் கெட்டிக்காரரய்யா. நன்னா யோசித்துதான் காரியத்திலே இறங்கியிருக்கியள்; சரி, சரி நடக்கும் காரியத்தை. (இதற்குள் எலெக்டிரிக் டிரெயின் வந்துவிட, இருவரும் வண்டியேறி விடுகின்றனர்.)

# போகிற போக்கில்...!

"இந்த மாகாணத்தின் எதிர்காலப் பொது வாழ்வில் எனக்கு இடமில்லையென்பதை அறிவேன். எனவே நான் இந்தோனேஷியாவுக்காவது சென்று தேசத்துக்குத் தொண்டாற்றலாமென நம்பி இம் முடிவுக்கு வந்தேன்."

—டாக்டர் சுப்பராயன்

சென்னை மாகாணத்தையே வெறுத்து கொதுக்கக் கூடிய இந்தநிலையும் வந்துற்றதே இவருக்கு என்ற பக்கெட், படுகேடாகக் கண்ணீர் உகுக்கிறார் சுப்பராயனின் அரசியல் சரிதத்தைத் தெரிந்த அனுதாபியொருவர்! 'நன்றிகெட்ட' மக்கள் வசியு தேசத்துக்காக அயல்நாடு சென்று உழைக்கத்தயாராகி விட்ட டாக்டரின் தன்னலமற்ற-டாப்பீடம் துறந்த பொது வாழ்வு கண்டு பொறாமைப்புயல் ஏன் வேறு எங்கும் புறப்பட்டுவிட்டன. இந்த கேடு கெட்ட நாட்டவருக்கு இனியுமா சேவை செய்ய வேண்டும், 'கம்' மென்று கையைக் கட்டிக்கொண்டு எஸ்டேட்டைக் கவனிக்கலாமே யென்கிறார், ஒரு காரியவாதி!

● ● ●

"இவ்வித திட்டத்தில் உடலுழைப்புக்கு இடம் அவசியம்"

—சி. ஆர்

வாழ்க்கைத் திட்டத்தில் ஒரு சிறு குத்தானே உடலுழைப்பை வற்புறுத்துகிறது ஸ்மிருதி!

"ரேடியோ மூலம் ஹிந்தி போதனை ஆரம்பமாகிவிட்டது"

—செய்தித் தலைப்பு

மானேஜர் இஷ்டம் போல் ப்ரோகிராம் மாறப்படமாட்டாது! அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப்படும். பொதுஜன வேண்டுகோளை முன்னிட்டு நாடக நாள் குறைக்கப்படமாட்டாது: ஆனால் நீட்டப்படும். காது செவிடான கள்ளர்கிழவர்களுக்கும் விசேஷ சரவில் டேபிதி கப்பபடும். என்றெல்லாம் விளம்பரப்படுத்தினால் எதிர்பாராததற்கு மேலாகவே ஆதரவு கிடைக்குமென்கிறார் ஒரு விளம்பரக் கலை விற்பன்னர்!

* * *

"ராஜாஜியை ஒரு சாக்ரடீஸ் எனக் கூறலாம்"

—நீதிபதி எ. எஸ். பி ஐயர்

நீதிபதியின் தீர்ப்பே, தீர்ப்பு!

* * *

'வீட்டைத் தீ வைத்துக் கொளுத்தியதாக, மனைவிக்குச் சிறைத் தண்டனை'

—செய்தித் தலைப்பு

நீர் வைத்துக் கொளுத்தியிருந்தால் தண்டனை இவ்வளவு தீவிரமாக இருக்காது.

## பாட்டிசைக்கும் தோழர்களுக்கு

சென்னை நகரிலே வதியும் - ஓய்வு நேரத்தில் இயக்கத் தொண்டு புரிய ஆர்வமுறும் - மேடை ஏறி இனிமையாகப் பாட்டிசைக்கும் திறமுடையத் தோழர்கள் 23-12-49 வெள்ளிக்கிழமை மாலை 5-மணிக்கு சென்னை, மண்ணடி, 2/45 எண் கட்டிடத்தில் வந்து கூடுமாறு அழைக்கப்படுகிறார்கள். சென்னை மாவட்ட மாநாட்டில் பலர் கூடி நின்று பாட்டிசைக்கும் முறையைக் கையாள, பயிற்சி கொடுப்பதற்காகவே அழைக்கப்படுகிறார்கள். ஆர்வமுள்ளோர் அனைவரும் வந்து ஆதரவு தந்துதவ வேண்டுகிறேன்.

இரா. நெடுஞ்செழியன்

செயலாளர் — பிரச்சாரக் குழு
தி. மு. க. தலைமை நிலையம்.

## ரேடியோ கண்காட்சி

பல்வேறு ரகமான ரேடியோக்கள், அவற்றின் விதவிதமான பாகங்கள் ஆகியவற்றின் கண்காட்சியொன்று சென்னை ராயப்பேட்டை பழைய 'மெட்ராஸ் கிளப்' கட்டிடத்திலுள்ள வருந்தினர் மாளிகையில், டிசம்பர் 23-முதல் 30 வரை நடைபெறுமெனத் தெரிகிறது. இதற்கு நுழைவுக்கட்டணமும் இல்லையாம்.

## சுதந்திர இந்தோனேஷியா முதல் பிரதமர்

டிசம்பர் 17-ந் தேதியன்று இந்தோனேஷ்ய ஐக்கிய நாடுகளின் முதல் தலைவராகப் பதவி யேற்ற டாக்டர் சுகர்னு மந்திரி சபை யொன்றைத் தேர்ந்தெடுக்க நால்வர் அடங்கிய கமிட்டியொன்றை நிறுவியுள்ளாரெனத் தெரிகிறது. இக்கமிட்டியில் டாக்டர் மகமது ஹட்டா தலைமையிடம் பெற்றுள்ளார்.

இந்நால்வருள் மூவர் கூடி மகமது ஹட்டாவை இந்தோனேஷிய ஐக்கிய நாடுகளின் முதல பிரதமராகத் தேர்ந்தெடுத்தனர்.

## வாலஜாபாத்பாடசாலை கட்டிடத்திற்கு நன்கொடை

மதுரை, திருச்சி, சாலப்பட்டினம் முதலிய நகரங்களில் பட்டு, ஜவுளி வாணிபம் புரியும் திரு. ஜே. எம். சாமியும், அவர் மகன் திரு. கமலையாவும் வாலஜாபாத் பாடசாலைக்கு வருகை புரிந்து பார்வையிட்டார்கள். பாடசாலைக்குக் கட்ட வேண்டிய கட்டிடத்தில் தம்பேரால் ஒரு அறை அமைப்பதற்காக ரூ. 500—நன்கொடை அளித்தார்கள். திரு. இதுபாணர்தவசியார் முன்னமே பாடசாலையைப் பார்வையிட்டு, கட்டிடத்திற்காக தம் பெயரால் ஒரு அறை அமைப்பதற்கு ரூ. 2000-ம் நன்கொடை அளித்தார்.

# மந்திரிமார் பவனிவரும் செலவுபற்றி சட்டசபையில் கேள்விகள்!

## ஒரே மாதத்தில் ஒன்பதேகால் ஆயிரம் 'அவுட்'!

கடந்த அக்டோபர் மாதத்தில் சென்னை மந்திரிகள் சுற்றுப் பயணத்துக்குப் பிடித்த செலவு (அலவன்ஸ்) ரூபாய் 9,253 ஆகுமென்று சென்னை சட்டசபையில் வெளியிடப்பட்டது. பிரதமருக்கு ரூ 545 (இதுவே குறைந்த தொகை) பிடித்ததென்றும் உணவு மந்திரிக்கு ரூ 1,249 (இது உயர்ந்த தொகை) பிடித்ததென்றும் கூறப்பட்டது. மந்திரிகள் தங்கள் சுற்றுப் பயணங்களில் செலவிடும் 'சக்தியும் உழைப்பும்' மாகாண மக்கள் நலன்களுக்குப் பெரிதும் துணை செய்கின்றனவாவென்று தோழர் நாஸர்க்கான் கேட்டதற்கு, 'ஆம்' என்று பதிலளிக்கிறார், மந்திரி தோழர் கோபால் ரெட்டி.

## புதுக்கோட்டை இணைப்பு வழக்கு தள்ளப்பட்டது

புதுக்கோட்டை(தனியரசு) இந்தியாவோடு இணைத்துப் பெற்றதை ஆட்சேபித்து பதிவு செய்யப்பட்ட வழக்கில், (ரூ ) திருச்சி மாவட்ட நீதிபதி தோழர் பி. டி. ராமன் நாயர் டிச. 19-ந் தேதி யன்று தீர்ப்பளித்தார். வழக்கு செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்யப்பட்டது.

புதுக்கோட்டை இப்படி இணைக்கப்பட்டது சர்க்காரின் செயலாகுமென்றும், இந்த 'ரூ' சிவில் தன்மையுடையதலலவென்றும், கோர்ட்டுக்கு இது பற்றி விசாரணை செய்ய அதிகாரமில்லையென்றும் நீதிபதி தெரிவித்தார். சிவில் புரோஸீஜர் கோடு முதல் உத்தரவு 8-வது விதியின்படி மக்கள் சார்பில் வழக்குத் தொடர வாதிக்கு உரிமையில்லை, இணைப்புப் பத்திரத்தில் கையொப்பமிட்ட புதுக்கோட்டை ராஜாவுக்கு முழு உரிமையுமுள்ளதென நீதிபதி மேலும் தெரிவித்தார்.

## ஏஜெண்டுகள் தேவை

❋

கீழ்க்கண்ட ஊர்களுக்கு 'மாலை மணி' விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய ஏஜென்டுகள் தேவை:—

ஆலங்குடி (மதுரை), கரூர், அருப்புக்கோட்டை, நாகூர், திருப்பாப்புலியூர், குளித்தலை, செங்கோட்டை, நாமக்கல், நிலக்கோட்டை, அரியலூர், வாணியம்பாடி, பேராவூரணி, திண்டிவனம், பண்ணுருட்டி, திருவையாறு.

நிர்வாகி: "மாலை மணி" சென்னை.

## இனி நடப்பவை

பொன்மலை— இவ்வூர் இளைஞர் வாசக சாலை மன்றத்தில், தோழர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் எம். ஏ. அவர்கள் தலைமையில் 24—12—49 சனி மாலை 4-30 மணிக்கு தோழியர் டி. எஸ். சோமதியின் இன்னிசை விருந்து நடைபெறும்.

* * *

சென்னை— கண்ணப்ப நாயனார் சமகத்தின் 19 வது ஆண்டு விழா 21—12—49 புதன் மாலை 5-45 மணிக்கு டை கறாக் கைத்தொழிற்சாலை நிலத்தில் நடைபெறும். சென்னை கவர்னர் பவநகர் மகாராஜா தலைமையில் பவநகர் மகாராணி பரிசுகள் வழங்குவார். இடம்: மீனாட்சியம்மன்பேட்டை, இராயபுரம்.

## ஆந்திர மாகாணப் பிரிவினைக்கு எதிர்ப்பு

### ராயலசீமை தூதுக்குழுவின் தீவிரம்

ராயலசீமை மகா சபையின் தூதுக் குழு வொன்று, டிச 19-ந் தேதியன்று சென்னை பிரதமர் தோழர் குமாரசாமி ராஜாவை சந்தித்து, ஆந்திர மாகாணப் பிரிவினை சம்பந்தமான முயற்சிகளனைத்தையும், குறிப்பாக, ஆந்திர மாகாணத்தோடு ராயல சீமையையும் சேர்க்கும் முயற்சிகளை— நிறுத்துமாறு வலியுறுத்தினர். தூதுக்குழுவில் தோழர் சூரிய நாராயணராவும் (எம். எல். ஸி.) இருந்தார்.

பிரதமரிடம் நீண்டதொரு விண்ணப்பமும் கொடுக்கப்பட்டது.

தூதுக் குழுவினர் கூறியவை பிரதமர் கேட்டிருந்து, விண்ணப்பத்தின் விவரங்களைப் பரிசீலனை செய்வதாகப் பதிலளித்தாராம்.

### திருமணம்

அய்யம்பேட்டை, டிச. 9— இவ்வூர் தோழர் ஓமர்து அவர்களுக்கும், தோழியர் காமாட்சியம்மைக்கும் தோழர் இராமசாமி அவர்கள் தலைமையில் சிறப்பான முறையில், வாழ்க்கை ஒப்பந்தம் சிறந்த முறையில் நடைபெற்றது. மணமக்களுக்கு வாழ்த்துப் பத்திரங்களும், தந்திகளும் அனுப்பிய தோழர்களுக்கு மணமக்கள் நன்றி தெரிவிக்கின்றனர். (இதன் மூலமாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி! (ஆ-ர்)

### திருத்தம்

உள்ளூர் 17-12-49 வெளியூர் 18-12-49 "மாலை மணி" யில் வெளிவந்துள்ள மதிப்புரைப் பகுதியில் "திராவிடம் பிரிந்தால் வருமா" என்ற புத்தகத்தின் விலை அணா 3 என்றிருப்பதை அணா 8 என்றும், "தமிழர் (சைவர்) திருமண முறை" என்னும் புத்தகத்தின் விலை 4 அணா என்றிருப்பதை 8 அணா என்றும் திருத்திக்கொள்க.

## தி. மு. கழகக் கிளைகள்

### மத்தூர் சிற்றூர்க்கிளை

மத்தூர், டிச. 15— சேலம் மாவட்டம் மத்தூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 27-11-49 இரவு 8 மணிக்கு "திராவிடன் வாசகசாலை"யில் தோழர் ம. ர. செல்லமாறன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்-மத்தூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— இ. ர. இளவரசு; துணைச்செயலாளர்:-ம. தேசோமணம்; பொருள் உறுப்பினர்:-ம. ர செல்லமாறன்; விளம்பர உறுப்பினர்:- ஈ. த. அரங்கநாதன். ஏனைய செயற்குழுவினர்:- ம. மு. கோவிந்தராசன், ம. ர. கோவிந்தராசன், ம. முருகேசன், எம். பி. எஸ். வாசன், இஸ்மாயில், இப்ராஹிம், மஹபூப்கான்.

பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

### கோம்பை-சிற்றூர்க்கிளை

கோம்பை, டிச. 16— மதுரைமாவட்டம், கோம்பையில் 13-12-49-ல் தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்-கோம்பை சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, செயற்குழு வொன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:- நா. ச. விக்டர்; பொருள் உறுப்பினர்:- அ. கி. நடராசன்; விளம்பர உறுப்பினர்:- கி. இராமகிருஷ்ணன். ஏனைய செயற்குழுவினர்:- கி. நடராசன், ச. விவேமுத்து, ச. செல்லத்துரை, கி. சமதுதீன், ம. திருமலையப்பன். பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கூட்டம் முடிவுற்றது.

* * *

### பொள்ளாச்சி மேற்கு வட்ட நகர உட்கிளை

பொள்ளாச்சி, டிச. 17— 10—12—49ல் தோழர் பி. எஸ். ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம்—பொள்ளாச்சி நகர மேற்கு வட்டம் உட்கிளை" நிறுவப்பட்டது. கீழ்க்கண்ட புதிய செயற்குழு வொன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— தி. இராமசாமி; துணைச் செயலாளர்:—எ. கே. கோவிந்தன்; பொருள் உறுப்பினர்:—கா. மயில்சாமி; விளம்பர உறுப்பினர்:—கி. சே. ரமணி, ஏனைய செயற்குழுவினர்:— தூயமணி, குலாம், இலட்சுமணி, இரா. ஆறுமுகம், வெங்கட்ராமன், தங்கவேல், அருச்சுனன், மு. தேவராசன், முனியப்பன், சமால், சுப்பிரமணியன். தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது. (வி. உ.)

* * *

### அரியலூர்—நகரக்கிளை

அரியலூர், டிச. 19— 17—12—49ல் நடைபெற்ற திராவிடத் தோழர்களின் கூட்டத்தில் 'திராவிட முன்னேற்றக் கழகம்—அரியலூர் நகரக் கிளை' நிறுவப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எ. ஜி. காதர்; நிதி உறுப்பினர்:- க. தினகரன்; விளம்பர உறுப்பினர்:- ரங்கநாதன்; ஏனைய செயற்குழுவினர்: கி. வேலுசாமி, க. செரிஜா, அப்துல்காதர் வி. செரிப்ஜா, அ. முருகேசன், (வி. உ.)


NATIONAL CALL

(நேஷனல் கால்)

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்து வெளிவரும் ஆங்கில வார இதழ்

தனிப் பிரதி 0—2—0

ஆண்டு சந்தா 6—0—0

முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

விவரங்கட்கு:— பொறுப்பாளர், நேஷனல் கால், சென்னை 17.


## பரணி பாடியவர்....

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

கருதியிருப்பதால், விவாதத்தின் இக்கட்டத்தைமுடித்துக்கொள்ள அனுமதி வேண்டுகிறேன்''

இந்து சட்டத் தொகுப்பு மசோதாமீது விவாதம் தொடங்கப் பெற்ற முதல் நாளன்று நேருவின் தொனியிலிருந்த திடமும் தெளிவும், இரண்டுமூன்று நாளைய விவாதங்களுக்குப் பின்னர், எந்த அளவுக்குப் படுமோசமாகத் தாழ்ந்துவிட்டதென்பதை சாதாரணமானவரும் உணரலாகும். இவ்வளவு கேவலமாக சுரம் இறங்கக் காரணமென்ன? 'ஏழை சர்க்கார் வாழ்வும் வீழ்ச்சியும் இம்மசோதாவின் வெற்றி தோல்வியில் தானிருக்கிறது' என்று பரணி பாடிய பண்டித நேரு, இன்று பாரோர் திடுக்கிடும் வகையில் நாடி தளர்ச்சியுற்றுப் பேசவேண்டிய அவசியமென்ன வந்ததெனக் கேட்கவே யாருக்கும் தோன்றும். பழமைப் பக்தர்களுக்கும், பஞ்சாங்க கோஷ்டியினருக்கும், பத்தாம் பசலிகளுக்கும், பிற்போக்குக் கும்பலுக்கும் பயந்தொடுங்கி விட்டார் நேரு என்பது தவிர, இதற்கு வேறு என்ன சமாதானம் கூறமுடியும்? அறிவும் நீதியும் அப்படியே ஏற்றுக் சொள்ளும் நல்ல காரியமென்றுதான் கருதுமொன்றுக்கு மெஜாரிட்டி பலமிருக்கையில், அதனை நிறைவேற்ற அஞ்சுகிறது சர்க்காரென்றால், அது மக்கள் நலத்தைவிட மடிசஞ்சிகள் 'நல்லெண்ணத்தை'பே பெரிதும் மதிக்கிறதென்பதுதானே பொருள்? உரிமையுடன் கூடிய வளமிக்க வாழ்வுக்கு ஏமாந்து நிற்கும் எண்ணற்ற லட்ச மக்களின் ஆசையுணர்வுகளுக்கன்றி, வைதிகக் கும்பல்களின் 'விஸ்வரூப'க் கனல்களுக்கே இன்றைய சர்க்கார் கட்டுப்படுகின்றன ரெனின் இதற்கு நாம் ஏக்கமும் துக்கமுறுது என்செய்வதென்று கேட்கிறோம்.

டாக்டர் அம்பேத்கார் தனது பதிலில் கொடுத்திருக்கும் காரத்துரை வைதிகபுரியினருக்கேயன்றி, வைதிகத்தின் வக்கிரபுத்தி ஆர்ப்பரிப்புகளுக்கெல்லாம் வளைந்து கொடுக்க முனைந்து நிற்கும் பண்டித நேருவுக்கும் நல்லதொரு மனந்திருந்தும் பேஸக்ப் பயன்படுமென நம்புறோம்.

## இந்தோ-சீனஎல்லையில் நெருக்கடி நிலைமை

சீனக் கம்யூனிஸ்டுகள் நாளுக்கு நாள் அபரிமிதமாக நெருங்கி வருவதால் பிரெஞ்சு இந்தோ-சீன எல்லையில் நிலைமை மிகமிக நெருக்கடியாகி வருகிறதென சீனச் செய்திதாள்கள் குறிப்பிடுகின்றன.


அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும் G முனியப்ப முதலி, மாநாரை.


## வானொலி

(22-12-49 வியாழக்கிழமை)

### சென்னை

[211·3 மீட்டர்கள்]

**காலை:**

7-15 தமிழில் செய்திகள்
7-30 வி. என். ராசன்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-50 டி. பஞ்சாபகேசன்—வயலின்

**பிற்பகல்:**

12-30 கிராமப் பள்ளிகளுக்கு
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு
2-45 நூல்வகை (இசைத்தட்டு)

**மாலை:**

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-30 சேனய்யா—நாகஸ்வரம்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 கி. என். ராஜலட்சுமி—பாட்டு

**இரவு:**

7-15 தமிழில் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டு (இ. த)
8-00 நாட்டுப் பாடல்கள்
8-15 பி எஸ். வேதாசலம்-பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
10-30 முடிவு

### திருச்சி

[395·8 மீட்டர்கள்]

**காலை:**

7-15 தமிழில் செய்திகள்
7-30 எஸ். லட்சுமிநாராயணன்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 காலை இசை (இசைத்தட்டு)
8-50 கி. என். ரத்னபாய், ராஜன்—வீணை

**பிற்பகல்:**

12-30 கிராமப் பள்ளிகளுக்கு
1-00 சதம்பம் (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 பெண்ணுலகம்
2-00 தமிழில் செய்திகள்
2-10 விஸ்வநாதய்யர் — வயலின் (இசைத்தட்டு)
2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு

**மாலை:**

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-00 ஜெ. சாம்ராஜ் — புல்லாங்குழல்
5-40 இசைப்பயிற்சி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 வி. நிலகண்டன்—வீணை
6-30 கிராம விசேஷங்கள்

**இரவு:**

7-15 தமிழில் செய்திகள்
7-30 சித்ரானம் (இசைத்தட்டு)
7-45 ஏ. என். கல்யாணசுந்தரம்—பேச்சு
8-00 எம். எஸ். சுப்புலட்சுமி (இசைத்தட்டு)
[illegible]
9-15 ஜெ. சாம்ராஜ் புல்லாங்குழல்
9-35 நிகழ்ச்சி கேட்டவை
[illegible] முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2-45, Muthumari Chetty Street, Madras-1.